**<u>சுருக்கம்</u>**

தமிழ் வளர்ச்சி – சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் – நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை – பரிசுத் தொகை உயர்வு செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (மற்றும்) செய்தித்துறை

அரசாணை (நிலை) எண்.20 நாள் 17.1.2008
சர்வஜித், தை 3
திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டது :-

அரசாணை (நிலை) எண்.157, த.வ. (ம) அ.நி. துறை நாள் 20.7.2001

..............

<u>ஆணை</u> :-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.1.2008அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் அரசின் விருதுகள் வழங்கும் விழாவின்போது செய்யப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட விதிமுறைகளில் இனம் 14இல் சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கும் இந்த ஆண்டு முதல் ரூ.10,000/– வழங்கப் பெறும் என்பதை மாற்றி ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப் பெறும் எனவும், இந்நூல்களின் பதிப்பகத்தினருக்கு ஒவ்வொரு நூலுக்கும் பரிசுத் தொகையாக ரூ.2000/– வழங்கப் பெறும் என்பதினை மாற்றி ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும் என ஆணையிடப்படுகிறது.

2. இந்த ஆணை 2006ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூலாசிரியர்கள் பதிப்பகத்தாருக்கு வழங்கப்பெறும் பரிசுத் தொகை வழங்குதல் முதல் நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் வளர்ச்சி வளாகம், சென்னை – 8
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 79
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9 / 18 / 35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –1
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
அனைத்து செயலகத் துறைகள், சென்னை –9
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /